முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் இயற்பகை நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

17.11.2018, சனிக்கிழமை

**1. கலிமீட்பின் ஞான குருவே**
**கலிகாலம் வெல்ல வந்த தவசியே**
**அழியாமை தந்து அருளுகின்ற**
**ஆறுமுக அரங்கமகா ஞானியே**

2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் ஒளி சூட்சும நூலை
இனிமைபட **விளம்பி தேள் திங்கள்**
**ஏக திகதி காரி வாரம் தன்னில்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 1ம் நாள் 17.11.2018, சனிக்கிழமை)**

3. தன்னிலே இயற்பகை நாயனாரும்
தாமுரைப்பேன் உலகோர் நலம் பெற
மண்ணுலகில் ஆன்மீகம் வளர்க்க
மாதருமம் காக்க அவதாரம் புரிந்த

4. அவதாரம் புரிந்த அரங்க ஞானி
அற சேவையில் இணைந்துவர
புவனமே மாற்றம் காண்கும்
புகலுவேன் ஞானவழி வருகின்ற

5. வருகின்ற சீடர் பெருமக்கள்
வடிவேலா என வணங்கி வர
ஆறுமுகா எனும் செபதபத்தை
அனுதினம் மக்கள் செய்து வர

6. வருகவே உண்மை ஆன்மீகம்
வலுவான நிலையில் வளர்ந்து
முருகப்பெருமான் தலைமை கொண்ட
முழுமையான ஞானயுகமாகும்

7. ஆகவே கலி இடர்கள் போக்கும்
ஆற்றல்மிகு அறம் சக்தி
வகைபட கொண்ட தேசிகனே
வாழும் ஞானியே உன் தலைமை

8. தலைமைதனை மக்கள் ஏற்றிட
தன்னார்வ தொண்டர்களாகி சீடர்கள்
பிழை நேரா தரும சேவை ஆற்றி
பொருளுதவி செய்து வருதல் காண

9. காணவே தருமத்தின் சக்தி
கலியுகமெங்கும் கூடுதல் ஆகி
ஞானபலம் வரும் மக்களெல்லாம்
ஞானதேசிகன் வழியே அடைதல் காண்பர்

10. காண்கவே ஞானிகள் ஸ்பரிசமும்
கந்தவேலன் அருளும் துணையும் கூடி
மேன்மக்கள் ஆவர் மெய்ஞானமுற
மேலும் பிறவா கதி எனும் பெரும்பேறு

11. பெரும்பேறு கண்டு உலகோர்
பேராசான் அரங்கன் உருவில்
ஆறுமுகன் அருட்தயவு சூட்சுமம்
அடைந்துமே ஞானிகள் ஆவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் இயற்பகை நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கலியுகத்தின் துன்பங்களிலிருந்து மக்களை மீட்டு ரட்சித்து காக்கவே கலிமீட்பின் ஞானகுருவாக முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட அரங்கமகா தேசிகனே கலிகாலத்தின் அறியாமையில் மூழ்கிய மக்களை மீட்டு கலியுகத்தை வெல்ல வந்திட்ட மகா தவசியே மக்களுக்கு அழியாமை எனும் அழிவிலாமையை தந்து அருள் செய்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலகம் நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 1ம் நாள் 17.11.2018 சனிக்கிழமையான** இன்றைய தினமதினிலே ஒளி சூட்சும நூல் தனையே இயற்பகை நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் இயற்பகை நாயனார்.

உலக மக்களெல்லாம் நல்வாழ்வு வாழ்ந்திட இவ்வுலகினில் ஆன்மீகம் வளர்த்திட உலகினில் தர்மத்தினை காத்திட அவதாரம் புரிந்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தர்மபணிகளில் அவரவரும் இணைந்து செயல்பட இவ்வுலகமே மாற்றம் காணும்.

ஞானவழிதனை மேற்கொண்டு ஞானவழியில் வாழ்ந்து வருகின்ற அரங்கனின் சீடர் பெருமக்கள் அரங்கனை வடிவேலா, முருகா என வணங்கி வர வேண்டும். ஆறுமுகா, அரங்கமகா தேசிகா, முருகப்பெருமானே என்றே தினம் தினம் மறவாமல் நாமஜெபங்களை சீடர்களும், உலகோரும் செய்து வர உண்மை ஆன்மீகம் உலகினில் வலுவான நிலையில் வளர்ந்து முருகப்பெருமானின் தலைமையை கொண்ட ஞான ஆட்சி உருவாகி முழுமையான ஞானயுகமாக இவ்வுலகம் மாறிடும்.

கலியுகத்தின் இடர்களைப் போக்கும் ஆற்றல் மிகுந்த அறத்தின் சக்தியை முழுமையாக கொண்ட ஞானதேசிகனாரை, அவதாரமாக வந்திட்ட அரங்கமகா ஞானியரை உலக மக்கள் தலைமையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமாயின் அரங்கனின் சீடர்கள் எல்லாம் தன்னார்வ தொண்டர்களாக ஆகி பிழை ஏதும் நேராமல் தருமத்தின் தொண்டுகளை செய்து வருவதுடன் அரங்கன் மேற்கொள்ளும் அறப்பணிகளுக்கு பொருளுதவிகள் செய்தும் வர வேண்டும். இவ்விதமே அனைவரும் செய்து வரவர, உலகினில் அரங்கன் தருமம் பெருகி தர்மத்தின் சக்தி கலியுகம் முழுதும் கூடுதலாகி உலகிற்கே அரங்கன் அருளால் ஞானபலம் பெருகிடும்.

உலக மக்களெல்லாம் அரங்கனை நாடி வந்து அரங்கன் தலைமையை ஏற்று அரங்கமகா தேசிகனார் மூலம் ஞானபலத்தினை அடைவார்கள், தொண்டுகளையும் பொருளுதவிகளையும் செய்யும் தன்னார்வ அரங்கன் சீடர்கள் எல்லாம் அரங்கமகானின் ஆசியால் ஞானம் கைவரப்பெறுவர்.

ஞானிகளின் ஸ்பரிசமும், முருகப்பெருமானின் அருளும் துணையும் அரங்கனின் அருளாசிகளும் அவர்களுக்கு பெருகி மேன்மக்களாக ஆகிடுவார்கள். மெய்ஞானத்தினைப் பெற்று மேன்மேலும் ஞானவழியில் சென்று தேறி பிறவா கதி எனும் மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்று பெரும்பேற்றை அடைவார்கள்.

பெரும்பேறு பெற்ற நன்மக்களெல்லாம் பேராசான் ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியரின் உருவினிலே முருகப்பெருமானின் அருட்தயவையும், அருட்சூட்சுமங்களையும், ஞான சூட்சுமங்களையும் கைவரப் பெற்று ஞானிகளாக ஆகிடுவார்கள் என்றே தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் இயற்பகை நாயனார்.

–சுபம்–